# THE INFLUENCE OF FAMILY ON ACADEMIC INVOLVEMENT OF TEENAGE STUDENTS: A SOCIOLOGICAL RESEARCH BASED ON TYPE - II SCHOOLS OF KAYTS EDUCATIONAL DIVISION (ISLAND NORTH)

**M. Chandrathas**[128]

Correspondence: mathushamary@gmail.com

ABSTRACT

Education is a basic human right and wealth of the nation. Therefore, every country has taken many steps to improve education including Sri Lanka. But Sri Lanka is facing many difficulties to improve educational level of teenage students. The objective of this study is to identify the influence of family factors on teenage students in type ii school in Kayts Educational division from Sociological point of view. Mixed method (Qualitative and quantitative) was employed to collect the relevant data. Schools in Eight to Eleven classes were selected. Total sample comprised 814 teenage students, 90 from six schools. Primary data were collected from different participant using semi - structured questionnaire, case studies, key-informer interviews and observation. This study utilized the secondary data too such as available literature reviews, statistics availed from Kayts Educational division report and information from retrieved from the Web sites. Results indicate that family low economic status, poor parent's educational level, Family structure mainly Single parent Family structure, poor school – family relationship and learning environment at home were influence an Educational involvement of teenage students. So, Parents must give higher level of psychological and Economic support for their children to encourage the study. Government's assistance programmes for awareness on Education system is important to enhance the Teenage student's Educational involvement.

**Keywords:** teenage, academic involvement, type ii schools, family structure, family socio- economic status

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகவும், நாட்டின் சொத்தாகவும் காணப்படுகின்றது. இதனால் இலங்கை உள்ளிட்ட ஒவ்வொரு நாடும் கல்வியினை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்பாடுகளினை முன்னெடுத்துள்ளன. ஆனால் இலங்கையானது இன்றும் பதின்மவயதினரின் கல்வி மட்டத்தினை மேம்படுத்துவதில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இவ்வாய்வு ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட வகை ii பாடசாலைகளில் கல்வி கற்கும் பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் குடும்பங்களின் செல்வாக்கினை சமூகவியல்ரீதியாக ஆராயும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு கலப்பு முறை ஆய்வாகும். ஆய்விற்காக எட்டாம் தரம் தொடக்கம் பதினொராம் தரம் வரையிலான பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 814 ஆகும். இவற்றில் நோக்கத்திற்குரிய மாதிரியெடுப்பின் மூலமாக 90 மாணவர்கள் ஆறு வகை ii பாடசாலைகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். முதலாம் நிலை தரவு சேகரிப்புக் கருவிகளாக நேர்காணலை அடிப்படையாகக்கொண்ட வினாக்கொத்து, பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல்கள், விடய ஆய்வு, நேரடி அவதானம் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்புக் கருவிகளாக இலக்கிய மீளாய்வுகள், இணையத்தளத் தரவுகள், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அறிக்கை போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வின் பேறுபேறுகளாக குடும்பத்தின் குறைவான பொருளாதார நிலை, பெற்றோரின் குறைந்த கல்வியறிவு மட்டம், குடும்பக் கட்டமைப்பு குறிப்பாக தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பம், பாடசாலை - குடும்பம்

[128] Department of Sociology, University of Jaffna, Sri Lanka.

உறவுநிலைகளிலுள்ள குறைபாடுகள், வீட்டில் கற்கும் இடத்தின் சூழல் போன்றன பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் செல்வாக்குச் செலுத்துபவையாக இனங்காணப்பட்டுள்ளன.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் கற்றல் ஈடுபாட்டினை அதிகரிக்கத் தேவையான பொருளாதார மற்றும் உளவியல்ரீதியான ஆதரவினை வழங்க வேண்டும். அத்துடன் அரசும் தற்போதைய கல்வி முறைமை தொடர்பான விழிப்புணர்வினை வழங்கும் வகையிலான செயற்பாடுகளினை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான மேலதிக உதவியினையும் வழங்குவதற்கான செயற்பாடுகளினை முன்னெடுக்க வேண்டும்.

**திறவுச் சொற்கள்:-** பதின்ம வயது, கற்றல் ஈடுபாடு, வகை ii பாடசாலைகள், குடும்பக் கட்டமைப்பு, குடும்ப சமூக- பொருளாதார நிலை

## அறிமுகம

பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகளை இனங்காணும் நோக்குடன் ஊர்காவற்றுறை கோட்டத்திற்குட்பட்ட வகைII பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதின்மவயதுக் காலம் என்பது மனித வாழ்க்கையில் முக்கியமான பருவமாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரைவிலக்கணத்தின்படி பதின்மவயதினர் என்போர் 10 – 19 வயதிற்கிடைப்பட்டோராகக் குறிப்பிடப்படுகின்றனர். இக்காலப்பகுதியில் இவர்கள் படிப்படியாக குடும்பத்திலிருந்து விலகுதல், சுதந்திரமடைதல், தமது வயதையொத்தவருடன் சேர்ந்து உறவுகளை வளர்த்துக் கொள்ளல், எதிர்ப்பாலினர் குறித்த ஆர்வம், தமது உணர்வுகளை வளர்ந்தோரிடமிருந்து மறைத்தல், தம்மை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம், பொறுமையின்மை, ஆபத்துக்களை சவாலாக ஏற்றல் போன்ற மாற்றங்களுக்கு உட்படுகின்றனர் (சாந்திகம், 2017).

ஒரு சமூகத்தின் தனியாள் , சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு கல்வியானது அவசியமானதாகக் காணப்படுகின்றது. கல்வியாலேயே ஊழல், வேலைவாய்ப்பின்மை, சூழல்சார் பிரச்சினை போன்ற பல சமூக விவகாரங்களைத் தீர்க்க முடிவதுடன் தனியாளை வளர்ச்சிப் பாதை நோக்கித் தூண்டவும் முடியும். இவ்வாறான நிலையில் இன்று பதின்மவயதினரின் கற்றல் ஈடுபாட்டில் குடும்பம் சார்ந்த பல காரணிகள் செல்வாக்கினை ஏற்படுத்தி தனியாளின் அபிவிருத்தியை மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்தியையும் பாதிப்படையச் செய்கின்றன. கற்றல் ஈடுபாட்டில் எதிர்கொள்ளப்படும் தடைகளால் பதின்மவயதினரிடையே கும்பல் நடத்தை, போதைப்பொருட்பாவனை, வேலையின்மை, தற்கொலை, இளவயதுக்கர்ப்பம், இளவயதுத்திருமணம் போன்ற சமூகப் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. அந்த வகையில் பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் குடும்பத்தின் கட்டமைப்பு, குடும்பத்தின் பொருளாதார நிலை, பெற்றோரின் கல்வியறிவு மட்டம், பாடசாலையுடனான குடும்பத்தின் உறவுநிலை, வீட்டில் பிள்ளைகளின் கற்றலுக்கான சூழல் போன்றவை மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்தும் குடும்பக் காரணிகளாக அமைந்துள்ளன.

இவ் அடிப்படையில் உலகளாவியரீதியில் பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள் தொடர்பில் நோக்குகின்றபோது,

OECD அங்கத்துவ நாடுகளில் 73%மான பதின்மவயதினர் வீட்டின் பொருளாதார நிலையின் பின்னடைவால் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னரும், பாடசாலை சென்று வந்த பின்னரும் வேலை புரிய வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். இந்நிலையானது அவர்களின் கற்றல் ஈடுபாட்டில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது (Organization For Economic Co-operation and Development, 2015).

அமெரிக்காவில் பதின்மவயதினரிடையே பாடசாலைக் காலம் என்பது அழுத்தம் நிறைந்ததாக உள்ளது. இங்கு குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலை, பெற்றோரின் குறைந்த கல்வியறிவு மட்டம் என்பவற்றினால் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு பாதிப்படைந்துள்ளது (Matthew Lynch, 2015; Tara Kunesh, 2008).

இலங்கையில் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வடமாகாணத்தினைப் பொறுத்தவரையில் போரினால் ஏற்பட்ட வாழ்வாதார இழப்புக்கள், குடும்பக் கட்டமைப்புக் குலைவு போன்றவற்றினால் அண்மைக்காலமாக கல்வி அடைவுமட்டங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன (முகுந்தன்.தே, 2016). தீவகம் வடக்குப் பிரதேசத்தில் 20%மான குடும்பங்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்றன. இதனால் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரால் கவனம் செலுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (முகுந்தன்.தே, 2016). அத்துடன் அண்மைக்காலமாக இப் பிரதேசத்தின் கல்வி அடைவுமட்டங்கள் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில் பதின்மவயதினரின் கற்றல் ஈடுபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு தீர்வுகளை இனங்காண வேண்டிய தேவை கருதி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### இலக்கிய மீளாய்வு

Liley Doley (2018) விபரண மதிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி இந்தியாவில் அசாம் மாநிலத்தில் மேற்கொண்ட ஆய்வில் வீட்டின் சூழல், பெற்றோரின் எதிர்பார்ப்பு, பெற்றோரின் ஈடுபாடு, பெற்றோரின் ஊக்கப்படுத்தல் என்பன மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்தவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஏழ்மையான குடும்பச் சூழலில் இருந்து வருகின்ற மாணவர்கள் குறைவான கற்றல் அடைவுமட்டங்களைக் கொண்டுள்ளனர். பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான உறவுநிலை மற்றும் கற்றலுக்கு உகந்தவாறான செயற்பாட்டுரீதியான வீட்டுச் சூழலும் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டினைத் தீர்மானிக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

Odok.R.E and Ella.G.E (2015) எளிய எழுமாற்று அடிப்படையில் 200 மாணவர்களினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் குடும்பத்தின் கட்டமைப்பு மட்டுமன்றி குடும்பத்தின் அளவும் மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர். பேரியளவான குடும்ப அளவானது பிள்ளைகளுக்குத் தேவையான உணவு, உடை நிதி மற்றும் கவனிப்பு என்பவற்றினை போதுமான அளவிற்கு வழங்குவதில்லை. இதனால் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளும், போசாக்குக் குறைபாடுகளும் ஏற்படுகின்றன. பலதாரக் குடும்ப வகையும் மாணவர்களின் கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. தனிக் குடும்ப வகையினைச் சேர்ந்த பிள்ளைகள் தமது பெற்றோரிடமிருந்து கல்விக்கான நிதியினை அதிகளவில் பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வாய்வுகளுடன் ஆய்வுப் பிரதேசத்தினை ஒப்பிட்டு நோக்குகின்றபோது இங்கு அதிகளவான மாணவர்கள் தனிக் குடும்ப அமைப்பில் வாழ்ந்தாலும் அவர்களின் கற்றலுக்கு சாதகமான சூழ்நிலை கிடைக்கப்பெறவில்லை எனலாம். மேலும் பெற்றோரின் குறைந்தளவான வருமான நிலை மற்றும் குறைந்தளவான கல்விநிலை போன்றவற்றினாலும், பாடசாலையுடனான உறவுநிலை மற்றும் பிள்ளைகளுடனான உறவுநிலை குறைவான இருத்தலினாலும் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு பாதிப்படைந்துள்ளது.

#### ஆய்வு முறையியல் (METHODOLOGY)

**ஆய்வு வடிவமைப்பு :-** குறிப்பிட்ட ஆய்வானது அளவுசார் மற்றும் பண்புசார் தரவு சேகரிப்பு நுட்பங்களை இணைத்து கலப்பு முறையில் (Mixed Method) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசம் :- ஊர்காவற்றுறை கோட்டத்திற்குட்பட்ட வகை – 2 பாடசாலைகள் (6 பாடசாலைகள்) ஆய்விற்குரிய மையமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தரவுசேகரிப்புக் கருவிகள்:-**

முதல்நிலை தரவு சேகரிப்பு கருவிகள்:- நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, நேர்காணல்கள் (6),விடய ஆய்வுகள் (10), நேரடி அவதானம்

இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு கருவிகள்:- ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அறிக்கை, நூல்கள், ஆய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வுகள், இணையத்தளத் தரவுகள்

**மாதிரியெடுப்பு நுட்பமும் மாதிரியின் பருமனும் :-**

ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் உள்ள வகை -2 பாடசாலைகளிள் எண்ணிக்கை ஆறு (06) ஆகும். ஆய்விற்காக பதின்மவயதினரே உள்வாங்கப்பட்டுள்ளதால் வகை - 02 பாடசாலைகளினைச் சேர்ந்த 6- 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களினை கருத்திற்கொண்டே மாதிரியெடுப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. அந்தவகையில் இப்பாடசாலைகளிலிருந்து நோக்கத்திற்குரிய மாதிரியெடுப்பின் மூலமாக 90 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அடுக்கமைக்கப்பட்ட மாதிரியெடுப்பின் விகிதாசார ஒதுக்கீட்டின் (Stratified SamplingProportional Allocation) மூலமாக பிரிக்கப்பட்டு மாதிரியெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது ($n_h=(N_h/N)*n$, $n_h$ - ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் எடுக்கப்பட வேண்டிய மாதிரியின் எண்ணிக்கை, $N_h$- h என்ற தொகுதியின் சனத்தொகை அளவு, N – மொத்த சனத்தொகை, n – தீர்மானிக்கப்பட்ட மாதிரியின் அளவு).

Exclusion :- இவ்வாய்வில் பதின்மவயது மாணவரிடையே ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த இருவர் கல்வி கற்பவர்களாக இருந்தபோது ஒரு மாணவரே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு மற்ற மாணவர் தவிர்த்து விடப்பட்டார். அதேசமயம் ஆய்வில் மெல்லக் கற்கும் வகையினைச் சேர்ந்த மாணவர்களும் தவிர்க்கப்பட்டனர்.

தரவுப் பகுப்பாய்வு:-

அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் இணைத்து கருப்பொருள் அடிப்படையிலான வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

## DISCUSSION AND RESULTS

**மாணவர்களின் குடும்பக் கட்டமைப்பும் கற்றல் ஈடுபாடும்**

*அட்டவணை 1.மாணவர்களின் குடும்பக் கட்டமைப்பு*

| குடும்பக் கட்டமைப்பு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| **தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பம்** | 12 | 13% |
| **தாய், தந்தை இருவரையும் கொண்ட குடும்பம்** | 71 | 79% |
| **பெற்றோரின் பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள்** | 7 | 8% |
| **மொத்தம்** | **90** | **100%** |

*மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து (2018)*

இக்குடும்பக் கட்டமைப்பு மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை நோக்கும்போது,***“அம்மா தோட்ட வேலைக்குப் போனால் அம்மம்மா மட்டும்தான் வீட்ட நிப்பா.***

***அவதான் எங்களப் பார்க்கிறது. எனக்கு வீட்டில பாடங்கள் சொல்லித் தாறதுக்கு ஒருத்தரும் இல்ல. அப்பா அம்மாவோட சண்ட பிடிச்சு இப்பிடி பிரிஞ்சிருக்காட்டி அம்மா வேலைக்குப் போக வேண்டிய தேவை இருந்திருக்காது . அம்மா வீட்ட நிப்பா. அதேமாதிரி என்ர படிப்புக்கும் அம்மா ஏதாவது உதவி செய்திருப்பா"(விடய ஆய்வு-5).***

எனவே தொகுத்து நோக்கும்போது தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பக் கட்டமைப்பு மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டிற்குத் தேவையான பெற்றோரின் ஊக்கலையும், பராமரிப்புக்களையும் வழங்குவதில் தடையினை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**வருமான நிலையும் கற்றல் ஈடுபாடும்**

*அட்டவணை 2.குடும்பத்தின் வருமான நிலை*

| குடும்ப மொத்த மாதாந்த வருமானம் (ரூபாவில்) | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 5000உம் , 5000 கீழ் | 23 | 26% |
| 5001 – 10000 | 27 | 30% |
| 10001 – 15000 | 16 | 18% |
| 15001 – 20000 | 7 | 8% |
| 20001 – 25000 | 4 | 4% |
| 25000 ற்கு மேல் | 13 | 14% |
| மொத்தம் | 90 | 100% |

*மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து (2018)*

இங்கு 56% மானோர் 10000/= ற்கு உட்பட்ட மாதாந்த வருமானத்தினை பெறுகின்ற குடும்பத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான குடும்ப வருமானநிலை கற்றல் ஈடுபாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை ஆய்வுப் பிரதேச மாணவர்களின் விடய ஆய்வுகளும், நேர்காணல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

***"அப்பா கூலி வேலை செய்யிறவர். கூலி வேலை எப்பவும் இருக்காது. எப்பவாவது வரும். மாதம் ஒரு பத்தாயிரத்துக்குள்ளதான் வரும். அதுக்குள்ளதான் செலவுகளச் சமாளிக்க வேணும்.இதில எங்கட ரெண்டுபேரிட படிப்புக்கும் செலவழிக்கிறது சரியான கஸ்டம்"(விடயஆய்வு -5).*** அத்துடன், ***"பெரும்பாலான பெற்றோர்கள் நிரந்தர வருமானமற்ற தொழில்களைத்தான் செய்து வருகின்றனர். குறிப்பாக விவசாயம், மீன்பிடியைத்தான் அதிகமான பிள்ளைகளின் பெற்றோர் வாழ்வாதாரமாக மேற்கொண்டுவருகின்றனர். இவற்றின் மூலமாக கிடைக்கப்பெறும் வருமானம் நிச்சயமற்றது. இந்நிலையில் அவர்களால் பிள்ளைகளின் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவதற்கோ அல்லது அவர்களுக்குத் தேவையானவற்றினை போதுமானவளவிற்கு வாங்கிக் கொடுப்பதற்கோ முடியாத தன்மை காணப்படுகின்றது. சில பிள்ளைகள்கூட இவ்வாறான குடும்ப வறுமையால் தாமும் பெற்றோருடன் இணைந்து அவர்களின் தொழிலில் உதவுகின்ற தன்மைகளும் காணப்படுகின்றன. இதனால் பிள்ளைகளும் தமது கற்றலில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை" (பிரதான தகவல் தருநர் நேர்காணல்- 2).***

மேற்குறிப்பிட்ட தரவுகளின் அடிப்படையில் குடும்பத்தின் வருமானப் பற்றாக்குறை மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, பெற்றோரின் கவனம் என்பவற்றினை வழங்கத் தவறியுள்ளதுடன் குடும்ப வறுமையினை உருவாக்கி மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டினைப் பாதிப்படையச் செய்துள்ளது.

**பெற்றோரின் கல்வியறிவு மட்டமும் மாணவர்களின் கற்றல் ஈடுபாடும்**

*அட்டவணை 3. பெற்றோரின் கல்வியறிவு மட்டம்*

| பெற்றோரின் கல்வியறிவு மட்டம் | தாய் | வீதம் | தந்தை | வீதம் |
|---|---|---|---|---|
| ஆரம்பக் கல்வி | 16 | 18% | 11 | 12% |
| இடைநிலை | 68 | 75% | 74 | 82% |
| உயர்தரம் | 6 | 7% | 5 | 6% |
| பட்டப்படிப்பு | - | - | - | - |
| **மொத்தம்** | **90** | **100%** | **90** | **100%** |

*மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து (2018)*

பெற்றோரின் இவ்வாறான கல்வியறிவு மட்டத்தினையும் பிள்ளைகளின் கல்விமீதான பெற்றோரின் ஈடுபாட்டையும் பின்வரும் நேர்காணல் எடுத்துக்காட்டுகின்றது.

***"இப்பிரதேச மக்கள் அதிகளவில் கல்வியறிவு இல்லாதவர்கள். இதனால் அவர்களிடையே கல்வி மாற்றம் தொடர்பில் தெளிவின்மையும், அறிவின்மையுமே காணப்படுகின்றன. இதனால் பெற்றோர் பிள்ளைகள்மீது கவனம் செலுத்துவது இங்கு குறைவாக உள்ளது. இதனால் பெற்றோரின் கல்விக்கும் பிள்ளைகளின் கல்விக்குமிடையே நீண்ட இடைவெளி காணப்படுகின்றது". (பிரதான தகவல் தருநர் நேர்காணல் -1).***

எனவே பெற்றோர் இடைநிலைக்குட்பட்ட கல்வியறிவினைக் கொண்டிருப்பதானது தற்போதைய கல்விநிலைகளை விளங்கிக்கொண்டு மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான ஊக்கலை வழங்கவும், அவர்களின் கல்வியில் கவனம் செலுத்தவும், வீட்டுப்பாட வேலைகளில் உதவுவதற்கும் தடையாக அமைந்துள்ளன எனலாம்.

**.வீட்டில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற இடமும் அதன் சூழற்தன்மையும்**

*அட்டவணை 4. வீட்டில் கற்கின்ற இடம்*

| வீட்டில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் இடம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| வரவேற்பறை | - | - |
| வரவேற்பறையின் அருகிலுள்ள அறை | 13 | 14% |
| தனித்த அறை | 60 | 67% |
| சமையல் அறை | - | - |

| | | |
|---|---|---|
| மரங்களுக்குக் கீழ் | 5 | 6% |
| வரவேற்பறை மற்றும் தனித்த அறை | 1 | 1% |
| தனித்த அறை மற்றும் மரங்களுக்குக் கீழ் | 8 | 9% |
| வரவேற்பறை மற்றும் மரங்களுக்குக் கீழ் | 1 | 1% |
| வரவேற்பறை, தனித்த அறை மற்றும் மரங்களுக்குக் கீழ் | 2 | 2% |
| **மொத்தம்** | **90** | **100%** |

*மூலம்:- களஆய்வு வினாக்கொத்து (2018)*

**வீட்டில் கற்கின்ற இடமும் அதன் தாக்கமும்**

நேரடிஅவதானத்தில் அதிகமான மாணவர்களின் வீட்டின் வரவேற்பறையில் தொலைக்காட்சி இருந்தமையினையும், பிள்ளைகளின் கற்றலுக்காக கொடுக்கப்பட்டிருந்த தனி அறைக்கும் வரவேற்பறைக்குமான தூரம் மிகக் குறுகியதாக இருந்தமையினையும் அவதானிக்க முடிந்தது.

***"எனக்கு வீட்டில படிக்கிறதுக்கெண்டு தனிய அறை இருக்குது. ஆனா கோலில இருக்கிற ரீவிச் சத்தம் நான் இருக்கிற இடம்வரைக்கும் கேட்கும். வீட்டில இரவு ஆறு மணிக்கு ரீவி போட்டால் இரவு ஒன்பது மணியாகும் நிப்பாட்டிறதுக்கு. என்ர இடம்வரைக்கும் நாடகச் சத்தம் கேட்கும். நான் சில நேரம் மேசையில கொப்பிய வச்சுகொண்டிருந்து அந்த சத்தத்ததான் கேட்டுக்கொண்டிருப்பன். ஒழுங்காப் படிக்கிறதில்ல"(விடய ஆய்வு-10).***

இவ்விடய ஆய்வுகளின் மூலமாக அயற்சூழல் காரணிகளன்றி மாணவர்களின் வீட்டுச் சூழலே அவர்களின் கற்றல் ஈடுபாட்டில் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

**.குடும்பம் - பாடசாலை உறவுநிலை தொடர்பானவை.**

*அட்டவணை 5. பெற்றோர் ஆசிரியர்களைச் சந்திக்கும் தடவைகள்*

| பெற்றோர் ஆசிரியர்களைச் சந்திக்கும் தடவைகள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| தினமும் | 6 | 7% |
| வாரத்தில் ஒருதடவை | 10 | 11% |
| மாதத்தில் ஒரு தடவை | 31 | 35% |
| பெற்றோர் சந்திப்பில் மட்டும் | 40 | 44% |
| மாதத்தில் ஒரு தடவை மற்றும் பெற்றோர் சந்திப்பில் மட்டும் | 3 | 3% |
| **மொத்தம்** | **90** | **100%** |

*மூலம்:- களஆய்வு வினாக்கொத்து (2018)*

இவ்விடயத்தினை மாணவர்களின் விடய ஆய்வுகள் இனங்காட்டுகின்றன.

***“எங்கட ஸ்கூல்ல இந்தமுறை O/L எடுக்கிற பிள்ளைகளிட பெற்றோருக்கு ஒவ்வொரு மாதமும் மீற்றிங் நடக்கும். அதுக்கு பெரும்பாலும் அம்மாதான் வாறவ. அப்பா ரிப்போர்ட் குடுக்கிற நேரம் வருவேர்” ( விடய ஆய்வு -4).***

எனவே அட்டவணை மற்றும் பண்புசார் தரவுகளுடைய முடிவுகளின் அடிப்படையில் நோக்குகின்றபோது பெற்றோர் - பாடசாலை உறவு குறைவாகவே காணப்படுகின்றது எனக் குறிப்பிடலாம். இவ்வாறான பெற்றோர்- பாடசாலை உறவுநிலைகள் ஒருவகையில் மாணவர்களின் கற்றல்மீதான பெற்றோரின் அக்கறை குறைவானநிலையினையும் எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே பெற்றோரின் அக்கறைகுறைவாக உள்ளதனால் இங்கு மாணவர்களின் கற்றல் ஈடுபாடு பாதிப்படைந்துள்ளது என்ற அனுமானத்தினைப் பெறமுடிகின்றது.

ஆய்விற்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் குடும்பக் கட்டமைப்பினை நோக்குகின்றபோது தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் 11 மாணவர்கள் தந்தை இல்லாதவர்களாக தாயுடன் வசிப்பவர்களாக உள்ளனர். இவ்வாறான நிலையில் தாய் வருமானமீட்டும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய தேவை காணப்படுவதால் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தக்கூடிய வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன எனலாம். இவ்வாறான குடும்பக் கட்டமைப்பு மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை Muritala Ishola Akanbi (2014) Kwara மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இனங்காட்டியுள்ளார். அவ் ஆய்வில் பெற்றோர் விவாகரத்தான குடும்பத்திலிருந்து வரும் மாணவர்கள் கல்விச் சூழலுக்குத் தம்மை தகவமைத்துக் கொள்ள பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே இப்பிரதேசத்திலும் தனித்த பெற்றொரைக் கொண்ட குடும்பச் சூழல் மாணர்களின் கற்றல் ஈடுபாட்டிற்கு பாதகமாக அமைந்துள்ளது எனலாம்.

இவ்வேளையில் 79%மான மாணவர்கள் தாய், தந்தை இருவரையும் கொண்ட குடும்பக் கட்டமைப்பில் வாழ்வதானது அவர்களின் கற்றல் ஈடுபாட்டிற்குச் சாதகமாக அமைந்துள்ளது எனலாம். இவ்வாறான விடயத்தினை Peter Barasa Nato (2016) கென்யாவில் Bungoma என்ற இடத்தில் மேற்கொண்ட ஆய்விலும் நிரூபித்துள்ளார். இங்கு தனித்த குடும்பத்தின் வருமானம், ஊக்கம், கற்றற் சூழல் என்பன பிள்ளைகளின் கல்வியில் நேர்நிலையான தாக்கத்தினை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். எனவே ஆய்வின் அடிப்படையில் நோக்குகின்றபோது அதிகமான மாணவர்களின் குடும்பக் கட்டமைப்பு அவர்களின் கற்றல் ஈடுபாட்டிற்கு சாதகமாக அமைந்துள்ளது எனலாம். அதேவளையில் சில மாணவர்களுககே குடும்பக் கட்டமைப்பு பாதகமான நிலையில் அமைந்துள்ளது எனலாம்.

Mahama and Campin (2011) கானாவில் Accra என்ற இடத்தில் குடும்பத்தின் வருமான நிலை பிள்ளைகளின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இங்கு குறைவருமானத்தால் பிள்ளைகளின் கல்விக்கு தேவையான நிதியினை ஒதுக்க முடியாத நிலை, கற்றலுக்கென தனியான இடத்தினை வீட்டில் ஒதுக்க முடியாத சூழ்நிலை என்பவற்றால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. இந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்திலும் 56% மான பிள்ளைகளின் குடும்ப வருமானம் 10000/=க்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான வருமான நிலையானது பிள்ளைகளின் கற்றல் ஈடுபாட்டிற்கு தேவையான வளங்களையும், ஊக்கத்தினையும் வழங்குவதில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

பெற்றோரின் கல்வியறிவு மட்டம் பிள்ளைகளின் கற்றல் ஈடுபாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை நோக்குகின்றபோது Faisal Ibrahim Mohammad Al-Matalka (2014) பெற்றோரின் கல்வியறிவுமட்டம் பிள்ளைகளின் கல்வி அடைவுமட்டங்களில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். அதிக கல்வியறிவு படைத்த பெற்றோர் தமது பிள்ளைகளின் பாடசாலைச் செயற்பாடு, அது தொடர்பான கலந்துரையாடலில் அதிகம் பங்கெடுக்கின்றனர். பிள்ளைகளின் துறைசார் பிரச்சினை, வீட்டுப்பாடவேலைகள், கற்றல் நேர வரையறை, கற்றல் வடிவங்களை அடையாளப்படுத்தல், எதிர்கால இலக்குகள் தொடர்பில்

அதிக கல்வியறிவு படைத்த பெற்றோர் கவனம் செலுத்துகின்றனர். அதேபோல ஆய்வுப் பிரதேசத்திலும் பெரும்பாலான பிள்ளைகளின் பெற்றோர் இடைநிலை மற்றும் இதற்கு கீழ்பட்ட கல்வியறிவினைக் கொண்டவர்களாக உள்ளனர். இதனால் அவர்கள் பிள்ளைகளுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுத்தல், ஆசிரியரைச் சந்தித்து கலந்துரையாடல் என்பவற்றோடு மட்டும் நின்றுவிடுகின்றனர். இவ்வாறான நிலை பதின்மவயது மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டினைப் பாதிப்படையச் செய்துள்ளது எனலாம்.

## CONCLUSION

ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் மாணவர்களில் கற்றல் ஈடுபாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்திவருகின்ற குடும்பம்சார்ந்த காரணிகள் தொடர்பில் ஆராய்கின்றபோது தனிக் குடும்பக் (Nuclear Family) கட்டமைப்பில் பிள்ளைகளின் கற்றல் ஈடுபாட்டிற்குத் தேவையான பெற்றோரின் பராமரிப்புக்கள் தனித்த குடும்பக் கட்டமைப்பில் கிடைப்பதனைவிட அதிகமாக உள்ளது எனலாம். அதேசமயம் தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பச் சூழலில் வாழ்கின்ற பிள்ளைகளுக்கு பெற்றோரின் கவனிப்பும், ஊக்கமும் தனிக் குடும்ப அமைப்பில் கிடைப்பதனைப் போல அமையவில்லை எனலாம். அந்தவகையில் தனிக்குடும்பக் கட்டமைப்பு, வருமானப் பற்றாக்குறை, பெற்றோரின் பராமரிப்புக் குறைபாடுகள், பெற்றோரின் கல்வியறிவுமட்டம், பெற்றோர்- பாடசாலை உறவுநிலை குறைவாக இருத்தல் போன்ற குடும்பக் காரணிகள் மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டினைப் பாதிப்பவையாக அமைந்துள்ளன எனலாம். எனவே பெற்றோர்களுக்கு நவீன கல்விமுறை பற்றிய விழிப்புணர்வினை வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் பெற்றோர்- மாணவர் உறவுநிலை, குடும்பம் - பாடசாலை உறவுநிலை என்பவற்றில் சிறப்பான நிலையினை கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

## REFERENCES

Faisal Ibrahim Mohamed Al-Matalka.(2014). The influences of parental socio-economic status on their children involvement at home . *International journal of humanities and social sciencies. Vol.4(5).*Retrieved December 8,2017

Lily Doley.(2018) The impact of Home Environment factors on Academic Performance of Adolescent, *Journal of Arts, Science and Commerce, vol-IX, Issuse-1*, Retrieved 22 November , 2017.

Mahama.C. and Campin.B. (2011).*Housing Tenure,Residential moves and children's Educational performance in Accra,Ghana*. Retrieved September 11,2017.

Muritala Ishola Akanbi.(2014).*Impact of divorce on academic performance of senior secondary students in Ilorin metropolis Kawa state*. Retrieved October 9,2017.

Odok R.E. and Ella (2015) *Influence of Family Size and Family type on Academic performance of Students in Government in Calabar municipality, Cross River State, Nigeria,* Retrieved September 11,2017.

Organization for Economic Co-Operation and Development.(2015).*Factors influencing student's academic performance*. Retrieved January 1,2018

முகந்தன்.தே.(2016) *தமிழ் சமதாயத்தில் உளநலம்.* MS solution publication